# சிறப்புத் தமிழ் – முதற் பருவம்

## I. நாட்டுப்புறப் பாடல்

1. பஞ்சம்
2. மானம் விடிவதெப்போ?

(இரண்டு மதிப்பெண்)

1. நாட்டார்பாடல் என்றால் என்ன? அதன் வேறுபெயர்கள் யாவை?
   ஏட்டில் எழுதப்படாத பாடல்கள் – வாய்மொழி பாடல்கள், கிராமத்துப் பாடல்கள், பாமரர் பாடல்கள்
2. நாட்டார் பாடலின் இலக்கணம் யாது?
   இயற்றியவர் இன்னாரென்று சொல்ல இயலாமை, இசையோடு பாடுதல்.
3. பஞ்சம் என்றால் என்ன?
   உணவின்றி மக்கள் துன்புறும் நிலை.
4. பஞ்சம் எந்த வருடத்தில் தோன்றியது?
   1877-ஆம் ஆண்டில் தாது வருடத்தில்
5. தமிழ் மாதங்களின் பெயர்களைக் கூறுக?
   தை, மாசி, பங்குனி, சித்திரை, வைகாசி, ஆனி, ஆடி, ஆவணி, புரட்டாசி, ஐப்பசி, கார்த்திகை, மார்கழி.
6. பொங்கல் பண்டிகை எப்பொழுது கொண்டாடப்படுகிறது?
   தை மாதத்தில்.

(ஐந்து மதிப்பெண்)

1. மழை பெய்யாத சூழலை 'மானம் விடிவதெப்போ?' பாடல் எவ்வாறு விளக்குகின்றது?
   * பூமியை நம்பி புத்திரரைத் தேடிவந்தோம்.
   * வானத்தை நம்பி மக்களைத் தேடிவந்தோம்.
   * ஏர்பிடிக்கும் தம்பியெல்லாம் சோர்ந்து நிற்கின்றனர்.
   * அந்தக் குறை கேட்டு வந்திறங்கு வர்ண தேவா.
   * காட்டுத் தழை பறித்து கையெல்லாம் கொப்புளங்கள்
   * வேலித் தழை பறித்து விரலெல்லாம் கொப்புளங்கள்.

THE QUAIDE MILLETH COLLEGE FOR MEN

* மழை பெய்யவில்லை. வருத்தங்கள் தீரவில்லை.
* மானம் விடிவதெப்போ? மாட்டுப் பஞ்சம் தீர்வதெப்போ?
* ஓடியும், பாடியும் விதைச்ச கம்பு ஊருவந்து சேரலையே.

(பத்து மதிப்பெண்)

1. பஞ்சம் குறித்து இடம்பெற்றுள்ள பாடற்கருத்துக்களை விளக்குக.

* தாது வருடப் பஞ்சத்தில் தாயும் பிள்ளையும் வேறாயினர்.
* தை மாதத்தில் தமிருக்கும் பஞ்சம்.
* மாசி மாதத்தில் மாடுகளும் பட்டினி.
* பங்குனிக் கடைசியில் பால்மாடெல்லாம் செத்தது.
* சித்திரை மாதத்தில் சீரெல்லாம் குலைந்து,
* வைகாசி மாதத்தில் வயிரெல்லாம் ஒட்டிப் போனது.
* ஆனி மாதத்தில் ஆணும் பெண்ணும் அலறினர்.
* ஆடி மாதத்தில் ஆளுக்கெல்லாம் ஆட்டமானது.
* ஆவணி மாதத்துவக்கத்தில் ஆட்டம் நின்று ஓட்டமானது.
* புரட்டாசிக் கடைசியில் உலகம் புரண்டது.
* ஐப்பசியில் அழுகையும் கண்ணீருமானது.
* கார்த்திகைக் கடைசியில் கண்ட இடமெல்லாம் பிணம்.
* மார்கழியில் பஞ்சம் நின்றது.
* காடு, வீடு, மேடு பக்கம் நூறு பிணம்.
* ஆற்றிலும் குளத்திலும் தண்ணியில்லை.
* கிணற்றில் உப்புத் தண்ணி. கிழடு கட்டை குடிக்கும் தண்ணி.
* அன்புடனே சர்க்கார் கஞ்சித் தொட்டி போட்டார்கள்.
* கோடி சனம் கஞ்சி குடித்துக் களைப்பாறினர்.
* கஞ்சிக்குக் கடிச்சுக்கிற காணத் துவையல் கொடுத்தார்கள்.

THE QUAIDE MILLETH COLLEGE FOR MEN

II - புனை கதை - கட்டை விரல்

(இரண்டு மதிப்பெண்)

1. 'கட்டை விரல்' கதையை எழுதியவர் யார்?

அறிஞர் அண்ணாதுரை.

2. அறிஞர் அண்ணா தமது படைப்புகளில் எவற்றுக்கெல்லாம் முக்கியத்துவம் கொடுத்துப் படைத்துள்ளார்?

பகுத்தறிவு, மூடநம்பிக்கை, சாதி ஒழிப்பு.

3. துரோணர் வில்வித்தையைக் கற்றுக்கொடுக்க மறுத்த காரணம் என்ன?

ஏகலைவன் வேடர் குலம் என்பதால் மறுக்கப்பட்டது.

4. ஏகலைவன் யாரைத் தன் குருவாக ஏற்றுக் கொண்டான்?

துரோணரை.

(ஐந்து மதிப்பெண்)

1. ஏகலைவனின் குருபக்தியை விளக்குக.

* ஐயனே என்னை ஆட்கொள்ள வேண்டும்.
* கேவலம், வேடனால் என்ன தரமுடியும் என்று எண்ண வேண்டாம்.
* வேடனாயினும் சொல் தவற மாட்டேன்.
* என் மனம் தூய்மையானது.
* சத்தியத்தின் வழிநடக்க அஞ்சமாட்டேன்.
* "குருதேவனே! இதோ காணிக்கை. என் வலதுகை கட்டைவிரலை ஒரு நொடியில் அறுத்து காலடியில் வைக்கிறேன்" - என்றான்.

2. ஏகலைவனின் உறவினர்கள் அவனை எவ்வாறு கண்டித்தனர்? (அ) ஏகலைவனின் இனத்தார் அவனைக் கண்டித்த விதங் குறித்து எழுதுக.

* வில் வித்தை மீது ஆசை கொண்டு நமது இனத்தின் மானத்தை இழந்து விடுவதா.

THE QUAIDE MILLETH COLLEGE FOR MEN

THE QUAIDE MILLETH COLLEGE FOR MEN

* விலங்கினமும் பறவையினமும் மனித குலத்தை விட, அம்புக்குத் தப்பும் அபாரத் திறமைப் பெற்றவை.
* அவைகளையே வில் வித்தையால் சாகடிக்கிறோம்.
* அப்படிப் பட்ட இனத்திலே பிறந்த நீ, ஒரு ஆரியனிடம் வில் வித்தை கற்றுக் கொள்வதா?
* நமது குலத்தொழில் வில் வித்தை- துரோணரின் குலத்தொழிலோ வெறும் புல்வித்தை.
* வேடர் உலகு உன்னை மதிக்குமா? வேதியர் கூட்டம் உன்னை கௌரவிக்குமோ?

(பத்து மதிப்பெண்)

1. ஏகலைவன் கதையை எழுதுக.
   * துரோணர் என்றொரு வில்வித்தை கற்பிக்கும் குரு இருந்தார்.
   * கல் மனம் படைத்தவர்.
   * அபாரத் திறமையைக் கண்டு ஏகலைவன் தன் குருவாகப் பாவித்தான்.
   * அவர் போல உருவம் அமைத்து வழிபட்டு வந்தான்.
   * சிறந்த வில் வித்தைக் கற்றான்.
   * இதையறிந்த அர்ஜீனன் அருவருப்படைந்து குருவைக் கண்டித்தான்.
   * அவனைச் சந்தோஷப் படுத்த எண்ணி ஏகலைவனிடம் சாகசமாகப் பேசினார்.
   * வலதுகைக் கட்டை விரலை காணிக்கையாகப் பெற்றார்.

## III - புதுக்கவிதை

### 1. ஆடிக் காற்றே

(இரண்டு மதிப்பெண்கள்)

1. 'ஆடிக் காற்றே' என்ற கவிதையை இயற்றியவர் யார்?

கவிஞர் சிற்பி பாலசுப்பிரமணியம்

2. கவிஞர் சிற்பியின் கவிதைத் தொகுதியின் பெயரைக் குறிப்பிடுக.

சர்ப்பயாகம்

3. கவிஞர் சிற்பி – குறிப்பு வரைக. [ஐந்து மதிப்பெண்]

* வானம்பாடிக் கவிஞர்.
* பாரதியார் பல்கலைக்கழகத் தமிழ்த்துறைத் தலைவராய்ப் பணியாற்றியவர்.
* ஒரு கிராமத்து நதி என்ற நூலுக்கான சாகித்ய அகாதமி விருது பெற்றார்.
* லலிதாம்பிகா அந்தர் ஜனம் என்பவர் மலையாளத்தில் எழுதிய புதினத்தை 'அக்கினி சாட்சி' என்ற பெயரில் மொழி பெயர்த்துள்ளார்.
* ஆயிரத்திற்கும் மேற்பட்ட கவிதைகள் இயற்றியுள்ளார்.

4. 'ஆடிக்காற்றே' என்னும் கவிதையில் கவிஞர் குறிப்பிடுவன யாவை?

* ஆடிக் காற்றே வா. மண்ணை விதைகளைத் தூவி முளைப்பதைக் காண விழைகின்ற காற்றே! என் சொல்லைக் கேள்.
* நெல்லை நாறவும் புழுக்கவும் செய்பவனைப் பாடையில் உருட்டிவிடு.
* இளைத்தவன் வயிற்றில் சொடுக்குபவனைக் குழியில் இறக்கிவிடு.
* மஞ்சள் இதழில் ஆபாசமாகக் கிறுக்குபவனைப் பனை மரத்தில் தொங்கவிடு.
* அவன் கை, கால்களை உதைத்துக் கொண்டு துள்ளல் அடங்கட்டும்.

* புரட்சிக் காற்றே! இவற்றையெல்லாம் காண விரும்பிய என் துணை நிலப்பரப்பையில் கிடக்கின்றாள்.
* எனக்காக மல்லிகை மலர்களைத் தூவ மாட்டாயா? மெல்லத் தூவு. நோகாமல் தூவு.

— x — x —

2. கடமையைச் செய்

[இரண்டு மதிப்பெண்]

1. 'கடமையைச் செய்' கவிதையை இயற்றியவர் யார்?

   கவிஞர் மீரா.

2. கவிஞர் மீராவின் கவிதைத் தொகுப்புகளைக் குறிப்பிடுக.

   கனவுகள்+ கற்பனைகள் = காகிதங்கள், ஊசிகள்.

[ஐந்து மதிப்பெண்கள்]

3. 'கடமையைச் செய்' என்னும் கவிதையில் கவிஞர் மீரா குறிப்பிடுவனவற்றை விளக்குக.

* அரசுப் பணியில் இருப்போரில் சிலர் பணிபுரியாத அவல நிலையை எடுத்துக் காட்டுகின்றது.
* பத்து மணிக்கு அலுவலகத்திற்குள் நுழைந்தேன்.
* கூட இருப்போரிடத்தில் குசல விசாரணை.
* தலை வலித்தது. தேநீர் குடிக்க நாயர் கடைக்குச் சென்றேன்.
* ஊரிலிருந்து வந்தவரிடம் ஒருமணி நேரம் உரையாடல்.
* இடையில் உணவு உண்டு களைப்புத் தீர கன்னித் தூக்கம்.
* முகத்தை அலம்பி, சிற்றுண்டி சாப்பிட்டு, வேகமாய் விகடனும் குமுதமும் படித்து முடித்தேன்.
* மெல்லக் காகிதக் கட்டை எடுத்துத் தூசியைத் தட்டித் துடைத்துக் கடமையைச் செய்யத் தொடங்கும் போது
* மணி ஐந்தாயிற்று காவற்காரன் கதவை அடைத்தான்.

3. இழந்தவர்கள்

[இரண்டு மதிப்பெண்]

1. 'கவிக்கோ' என்று அழைக்கப்படுபவர் யார்?

கவிஞர் அப்துல் ரகுமான்.

2. கவிக்கோ அப்துல் ரகுமான் சாகித்ய அகாதமி விருது பெற்ற நூல் எது?

ஆலாபனை.

3. கவிக்கோவின் கவிதைத் தொகுதிகளைக் குறிப்பிடுக.

பால்வீதி, நேயர்விருப்பம், தீபங்கள் எரியட்டும்

(ஐந்து மதிப்பெண்)

4. கவிக்கோ அப்துல் ரகுமான் குறிப்பு வரைக.

* 1937 இல் பிறந்தார்.
* இருபதாம் நூற்றாண்டின் இணையற்ற கவிஞர்.
* 'ஆலாபனை' என்னும் கவிதைத் ~~தொகுதி~~ தொகுதிக்காக சாகித்ய அகாதமி விருது பெற்றார்.
* பால்வீதி, தீபங்கள் எரியட்டும், நேயர்விருப்பம் முட்டைவாசிகள் முதலான கவிதைத் தொகுதிகளை வெளியிட்டுள்ளார்.

5. வாழ்க்கையின் ஓட்டம் குறித்து கவிஞர் கூறுவன யாவை?

* ஓடிக் கொண்டிருப்பவனே நில்! எங்கே ஓடுகிறாய்? எதற்காக ஓடுகிறாய்?
* வாழ்க்கையைப் பிடிக்க ஓடினாய். கண்ணை மூடிய ஓட்டத்தில் அதைப் பார்க்காமலேயே ஓடுகிறாய். உன்னிலிருந்தே ஓடுகிறாய். உன்னை
* நில், கவனி, உன்னை விட்டு ஓடுகிறாய்.

6. வாழ்க்கையின் சங்கீதம் எங்கெல்லாம் ஒலிப்பதாகக் கவிக்கோ கூறுகிறார்?

* உன் மனைவியின் கொலுசில்
* குழந்தையின் சிரிப்பில்
* அண்டை வீட்டுக்காரனின் கை அசைப்பில்
* தெருவில் போகின்ற அந்நியனின் திரும்பிப் பார்த்தலில்.

வாழ்க்கையின் சங்கீதம் ஒலிக்கிறது.

(பத்து மதிப்பெண்)

7. 'இழந்தவர்கள்' என்னும் கவிதையில் கூறப்படுவனவற்றை தொகுத்து எழுதுக.

* ஓடிக் கொண்டிருப்பவனே நில். கண்ணை மூடி ஓடுபவனாய் வாழ்க்கையைப் பார்க்காமலேயே ஓடுகிறாய்.
* குளிர்காய சுள்ளிப் பொறுக்கினாய். சுள்ளி பொறுக்குவதிலேயே உன் ஆயுள் செலவாகிறது. நீ குளிர் காய்வதில்லை.
* வாழ்க்கை என்பது திருவிழா போன்றது. அதைக் கொண்டாடாமல் கூட்டத்தில் தொலைந்து போகிறாய்.
* ஒவ்வொரு வைகறையும் தங்கத் தட்டில் பரிசுகளைக் கொண்டு வருகிறது. நீயோ பெற்றுக் கொள்வதில்லை.
* இரவுகள் நட்சத்திரப் பூச்சூடி அழகோடு வருகிறது. நீ தழுவிக் கொண்டதே இல்லை.
* பௌர்ணமி நிலவு இரவுக் கிண்ணத்தில் மதுவை நிரப்புகிறது. நீயோ அருந்துவதில்லை.
* மனைவியின் கொலுசில் குழந்தையின் சிரிப்பில் வாழ்க்கையின் சங்கீதம் ஒலிக்கிறது.
* தறிநாடாவைப் போல் இங்கும் அங்கும் அலைகிறாய்.
* கடிகார முள்ளாய் சுற்றிக் கொண்டிருக்கிறாய்.
* வாழ்க்கை என்பது வட்டமடிப்பதில் இல்லை.

THE QUAIDE MILLETH COLLEGE FOR MEN

★ நீ ஜீவனுள்ள எழுத்துக்களால் ஆனவன்

★ நீ முத்துக்கள் நிறைந்த சமுத்திரம். கிளிஞ்சல் பொறுக்க அலைந்து கொண்டிருக்கிறாய்.

★ நீ வயிற்றிலிருந்துதான் வந்தாய். வயிற்றில் விழுந்து கிடப்பவனே இதயத்திற்கு ஏறு! அங்கே உனக்கான ராஜாங்கம் ~~காத்துக்~~ காத்திருக்கிறது.

— x — x —

## IV. மொழித்திறன் (இரண்டு மதிப்பெண்)

### (அ) கலைச் சொற்கள்

Allergy – ஒவ்வாமை

Antibiotic – நுண்ணுயிர் எதிரி

Microscope – நுண்ணோக்கி

Telecommunication – தொலைத் தகவல் தொடர்பு

Bio-chemistry – உயிர் வேதியியல்

Bio-Technology – உயிர் தொழில் நுட்பவியல்

Bio-Physics – உயிர் இயற்பியல்

Environmental – சுற்றுச் சூழல்

Microwave – நுண் அலைகள்

Remote control – தொலை இயக்கி

E-Mail – மின் அஞ்சல்

Fax – தொலை நகல் (படி)

Telegram – தொலைத் தந்தி

Battery – மின்கல அடுக்கு

Filter – வடிப்பான்

Amplifier – மின் மிகைப்பி

Transformer – மின்மாற்றி

THE QUAIDE MILLETH COLLEGE FOR MEN

THE QUAIDE MILLETH COLLEGE FOR MEN

(ஆ) பொருந்திய சொல் தருக: [இரண்டு மதிப்பெண்]

1. அகம் – உடல், மார்பு, நெஞ்சு (உடல்)
2. ஆசை – விருப்பம், அவா, அன்பு (விருப்பம்)
3. ஓதிமம் – காக்கை, குயில், அன்னம் (அன்னம்)
4. கார் – கார்நாற்பது, மேகம், கருமை (கருமை)
5. ஊன் – இறைச்சி, உடல், கொழுப்பு (இறைச்சி)
6. மூங்கில் – ஒருவகை மரம், செடி, கொடி (ஒருவகை மரம்)
7. களிறு – ஆண்யானை, பெண்யானை, யானைக்குட்டி (ஆண் யானை)
8. ஆல் – ஆலமரம், கள்ளி, அரசு (ஆலமரம்)
9. அரி – திருமால், நான்முகன், சிவன் (திருமால்)
10. அசலம் – மலை, சமவெளி, ஆறு (மலை)

(இ) கீழ்க்காணும் தொடர்களிலுள்ள எழுத்துப் பிழைகளை நீக்கி எழுதுக.

1. அவன் எதிலும் அக்கரை கொள்வதில்லை
   அவன் எதிலும் அக்கறை கொள்வதில்லை
2. அதிற்கும் இதிற்கும் எந்தத் தொடர்பும் இல்லை.
   அதற்கும் இதற்கும் எந்தத் தொடர்பும் இல்லை.
3. அவன் அதிகமாக சிலவு செய்கிறான்.
   அவன் அதிகமாக செலவு செய்கிறான்.
4. தேனீர் கடைக்கிச் செல்ல வேண்டும்
   தேநீர் கடைக்குச் செல்ல வேண்டும்.
5. அதுகள் நல்லதுகள் அல்ல.
   அவை நல்லவை அல்ல.
6. சுவற்றில் மோதியது.
   சுவரில் மோதியது.
7. தேசியகீதம் பாடினார்கள்.
   தேசிய கீதம் பாடினார்கள்